**TNTT070033112026**

<u>நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, கோவில்பட்டி</u>

முன்னிலை – திருமதி. M. மணி மேகலா, எம்.ஏ., எம்.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.2, கோவில்பட்டி

2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 20ம் நாள் திங்கட்கிழமை

Crl.M.P.No. 888/2026

in

Cr.No. 652/26

1. கருத்தபாண்டி,
த/பெ. குமார் என்ற கிருஷ்ணகுமார்,
இந்திரா நகர்1 வது தெரு,
பெருமாள் கோவில் தெரு,
கோவில்பட்டி,
தூத்துக்குடி மாவட்டம்.

2. கன்னிராஜ்,
த/பெ. செல்லத்துரை,
695, மேற்கு தெரு,
செட்டிகுறிச்சி,
கயத்தார் தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம். ... மனுதாரர்கள்/எதிரிகள்

*/எதிர்/*

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்
கோவில்பட்டிமேற்கு காவல் நிலையம்
நிலைய குற்ற எண். 652/26 ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்

1.மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவு

## <u>உத்தரவு</u>

### <u>மனுதாரர் மனுவின் சுருக்கம்</u>

2. மனுதாரர்கள்/எதிரிகள் மீது கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய குற்ற எண் 652/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –

ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, எதிரிகள் 15.07.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார்கள். மனுதாரர்கள் குற்றமற்றவர்கள். மனுதாரர்கள் சட்டத்தை மதிப்பவர்கள் என்றும், தலைமறைவாக மாட்டார்கள் என்றும், அவரை பிணையில் விடுவிக்க பிணையதாரர்களை வழங்க தயாராக இருப்பதாகவும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்</u>

3. அரசு தரப்பு வழக்கு என்னவென்றால், எதிரிகள் அரசால் தடை செய்யப்பட்ட போதைப்பொருட்களை வைத்துக்கொண்டு அதிக லாபநோக்கத்தோடு விற்க முயற்சி செய்ததாகவும், போலீஸ் பார்ட்டிகளை அரசு பணி செய்யவிடாமல் தடுத்தும், அசிங்கமாக பேசி, கொலைமிரட்டல் விடுத்ததாக எதிரிகள் மீது கோவில்பட்டிமேற்கு காவல்நிலைய குற்ற எண் 652/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் கீழ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>ஆட்சேபனையின் சுருக்கம்:</u>

4. அரசு தரப்பில் 20.07.2026 ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையில், கோவில்பட்டிமேற்கு காவல் நிலைய குற்ற எண். 652/26 சட்டப்பிரிவுகள் 296(b), 132, 224, 351(3) BNS, 8(c) r/w 20(b)(ii)(A) NDPS Act –ன் வழக்கு தற்போது ஆரம்பகட்ட புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், இவ்வழக்கில் எதிரியானவர் காவல் பணியில் உள் காவல் அதிகாரி மற்றும் காவல் ஆளிநர்களை பணிசெய்யவிடாமல் தடுத்தும், கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியும் உள்ளார் என்றும், இவ்வழக்கின் எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் மீண்டும் இதுபோன்ற கஞ்சா வகைபொருட்களை பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கும் ஏழை கூலித்தொழிலாளிகளுக்கும் விற்பனை செய்து சமூகசீர்கேட்டை ஏற்படுத்தக்கூடும் என்றும், வழக்கின் நீதிமன்ற விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் வெளிமாநிங்களுக்கோ அல்லது வெளிமாவட்டத்திற்கோ சென்று தலைமறைவாகி வழக்கின் விசாரணையில் காலதாமதம் ஏற்படுத்தக்கூடும் என்றும், இவர்களுக்கு பிணை வழங்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

<u>இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா?</u>

5. ஆவணங்கள் பரிசீலிணை செய்யப்பட்டன.

6. மனுதாரர்கள்/எதிரிகள் தரப்பில் சட்டப்பிரிவு 480 BNSS கீழ் மனுதாரர்கள்/எதிரிகளுக்கு பிணை கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. எதிரிகள் தரப்பில் கற்றறிருந்த வழக்கறிஞர்கள் வாதிடும்போது, எதிரிகளுக்கு எதிராக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் நிபந்தனையை கடைபிடிக்க எதிரிகள் தயாராக உள்ளார் என்றும் வாதுரை செய்தார்.

8. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, எதிரிகள் 15.07.2026 ம் தேதி முதல் ஏறக்குறைய 6 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து வருவதை

கருத்திற்கொண்டும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும் இந்நீதிமன்றம் பிணை மனுவை கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கலாம் என்று தீர்மானிக்கிறது.

9. இறுதியாக இப்பிணை மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது:

<u>**நிபந்தனைகள்:**</u>

1. மனுதாரர்கள் தலா இரண்டு பிணையதாரர்களை ஆஜர்படுத்தி தலா ரூ.10,000/– த்திற்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. மனுதாரர்கள் இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடக்கூடாது.
3. மனுதாரர்கள் சாட்சியங்களை கலைக்கவோ, சாட்சிகளை மிரட்டவோ கூடாது.
4. விசாரணை தேவைப்பட்டால் மனுதாரர்கள் காவல்துறைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.
5. மனுதாரர்கள் தினசரி காலை 10.00 மணிக்கு எதிரிகள்/மனுதாரர்கள் 15 நாட்கள் காவல்நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும், உத்தரவிடும்போது இந்த நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்படுகிறது.

//இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் வருடம் ஜூலை மாதம் 20 நாள் திங்கட்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.//

(ஒப்பம்)...M. மணி மேகலா/20.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.